DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 225/2024

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பவித்ரா |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01.**04.2025**

**முதல் விசாரணை:**

1.நான் தற்போது மாமண்டூர் கிராமத்தில் குடியிருந்து செவிலியராக வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது அம்மாவின் 8 சவரன் நகையை பீரோவில் இருந்து காணவில்லை என்று எனது அம்மா சொன்னார். இது சம்மந்தமாக எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்னர் 3 மாதம் கழித்து காவல் நிலையத்தில் இருந்து நகை காணாமல் போன நகை கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். பின்னர் நான் எனது அம்மா மற்றும் தம்பி ஆகியோர் காவல் நிலையத்திற்கு சென்று நகையை அடியாளம் காட்டினோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** புகார் கொடுக்கும்போது நான் என் அம்மாவுடன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேனா என்றால் ஆமாம். எந்த தேதியில் புகார் கொடுத்தோம் என்றால் சம்பவம் நடந்த அன்றைய தினமே புகார் கொடுத்தோம். அனைவரையும் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்களா என்றால் ஆமாம். என் அம்மா புகாரில் யார் திருடியது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 225/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பானு |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01.**04.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வடபாதிரி கிராமத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக வாழ்ந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனக்கு சொந்தமான 8 சவரன் நகையை வீட்டில் பீரோவில் வைத்திருந்த நகையை காணவில்லை. பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் 3 மாதங்கள் கழித்து ஒரு நாள் ஆஜர் எதிரிதான் நகையை எடுத்ததாக போலிசார் அடையாளம் காட்டினர். என்னிடம் காட்டப்படும் புகை படத்தில் உள்ள நகை என்னுடையது தான். **(அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு மனு செய்து நீதிமன்றத்தில் பெற்றுகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. எந்த தேதியில் என் நகை காணாமல் போனது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. திருடு போன அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரை யார் எழுதினார் என்றால் காவல் நிலையத்தில் உள்ள காவலர் தான் எழுதினார். மேற்படி புகாரில் என்ன விவரம் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் கையொப்பம் போடசொன்னதற்காக கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரையானவர்கள் எனது உறவினர்களா என்றால் ஆமாம். மேற்படி நகையை யார் திருடியது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி எனது அக்கா மகன் என்றால் சரிதான். மேற்படி ஆஜர் எதிரி எனது நகையை திருடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னையும் பட்டியல் சாட்சிகளையும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். வேறு எங்கும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி ஆஜர் எதிரிதான் எனது நகையை திருடினார் என்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 225/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அரவிந்தன் |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01.**04.2025**

**முதல் விசாரணை:**

1.நான் தற்போது வடபாதிரி கிராமத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது அம்மாவிற்கு சொந்தமான நகையை வீட்டில் வைத்திருந்த நகையை காணவில்லை. நான் சவாரி பள்ளி சவாரி செல்லும் போது எனது அம்மா வீட்டில் இருந்த நகையை காணவில்லை என்று சொன்னார். பின்னர் நானும் என் அம்மாவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பின்பு 3 மாதம் கழித்து காவல் நிலையத்தில் நகை கிடைத்ததாக தகவல் சொன்னார்கள். ஆஜர் எதிரி எனது அண்ணன் நகையை எடுத்ததாக போலிசார் அடையாளம் காட்டினர். எனது அம்மா திருடு போன நகையை அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. எனக்கு திருடு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு எனது அம்மா மேற்படி சம்பவத்தை சொல்லிதான் தெரியும். திருடு சம்பவத்தை பற்றி எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த 4 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தோம். புகார் கொடுக்கும் போது நான் உடன் சென்றிருந்தேன் என்றால் ஆமாம். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார்களா என்றால் ஆமாம். புகாரில் எனது அண்ணன் தான் திருடினார் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி நகையை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். போலிசாரே ஆஜர் எதிரிதான் குற்றம் புரிந்துள்ளார் என்று எழுதிவிட்டார்களா என்றால் ஆமாம். புகாரில் உள்ள விவரங்களை படித்து பார்க்காமல் எனது அம்மா கைப்பொப்பம் செய்துவிட்டார்களா என்றால் ஆமாம்.